**ஹோமாகம பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

ஹோமாகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக ஹோமாகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமானதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பொது நிர்மாண வேலைகள் கடன்கொடுத்தோராக ரூபா 142,433,000 ஒப்பந்த மதிப்பீட்டு பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பொது நிர்மாண வேலைகள் கடன்கொடுத்தோர் ரூபா 142,433,000 மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், சேமிக்கப்படுகின்ற அல்லது அதிகரிக்கின்ற தொகை | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது கடன்கொடுத்தோர் பதிவேட்டில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 6,067,500 ஆன 06 காணிகளின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பட்டோலைகளில் உள்ளடக்கப்படாத இதில் குறிப்பிடப்பட்ட காணிகளின் பெறுமதி மூல உரித்துறுதியை கண்டறிந்ததன் பின்னர் 2023 இன் பட்டோலைகளில் உள்ளடக்கி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியினை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட 08 கொடுக்கல் வாங்கல்களுக்காக அதற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்கில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமல் ரூபா 69,176,112 நடைமுறை வேலைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2023 இன் இறுதி கணக்குகளில் நாட்குறிப்புகளில் இட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுக்கல் வாங்கல்கள் அதற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்பு கணக்குகளில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆதன வரி கணக்கிற்கும் பதிவேடுகளுக்கும் இடையே ரூபா 2,043,248 வேறுபாடு காணப்பட்டது. | மிகைக் கட்டணம் அறவிடுதல் இரண்டு தடவை சேர்க்கப்பட்டமையால் அதனை நீக்கி சரிசெய்யப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 68,739,150 கூட்டுத் தொகையான 02 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பரீட்சிக்கூடிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 128 ஆம் பிரிவு. | சபையினால் உரிமை கோரப்படுகின்ற கட்டிடங்கள் மற்றும் விளையாட்டு மைதானம், மூலிகை தோட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய 18 காணிகள் மற்றும் 36 மயான நிலங்கள் என்பன சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | உரித்தினை உறுதிப்படுத்தல் தொடர்பாக தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 37,738,951 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 215,580,460 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 137,990,912 | 283,704,571 | 170,489,809 | 117,009,558 | 95,552,398 | 157,163,639 | 86,947,680 | 473,754,200 |
| (ii) | வாடகை | 17,167,850 | 240,392,750 | 13,463,734 | 226,929,015 | 19,557,700 | 16,325,351 | 15,250,851 | 6,474,500 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 6,100,556 | 4,062,484 | 3,946,625 | 115,859 | 6,520,634 | 4,476,838 | 4,475,838 | 1,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 359,252,660 | 981,255,856 | 431,474,550 | 549,781,305 | 293,435,630 | 277,520,174 | 272,992,316 | 4,764,707 |
| | | -------- | --------- | --------- | ---------- | --------- | ------- | ------- | --------- |
| | மொத்தம் | 520,511,978 | 1,509,415,661 | 619,374,718 | 893,835,737 | 415,066,362 | 455,486,002 | 379,666,685 | 484,994,407 |
| | | ========= | ========= | ======== | ========= | ========= | ======== | ======== | ======== |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதனவரி** | | |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டிய ஆதனவரி பெறுமதி ரூபா 117,006,559 ஆக இருந்ததுடன், இந்த ஆதனவரி இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021.12.31 இல் உள்ளவாறு ரூபா 117,006,559 நிலுவையில் ரூபா 22,998,260 நிலுவை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது நிலுவை பணம் ரூபா 94,008,299 ஆக காணப்பட்டது. | தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு நிலுவை ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகார தரப்பினரிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு | நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்திற்கான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக மாகாண இறைவரி | அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிடுதற்கு |

| | | |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 20,448,623 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 528,133,654 ஆகும். | திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் உரிய தகவல்கள் கிடைத்ததன் பின்னர் சபையின் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படும். | விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீகொட பொதுச் சந்தைக்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 03 ஆம் பந்தியின் தவறின் காரணமாக 2014 ஆம் ஆண்டு முதல் பிழையாக சிட்டையிடப்பட்ட நிலவாடகை வருமான பெறுமதியான ரூபா 226,800,000 தொகையினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரிவில் உள்ள பிரச்சினைகள் உடனான நிலைமையினால் இந்த பணம் அறவிட வேண்டியிருந்தது. இது வரை பொருளாதா நிலையத்தின் முகாமைத்துவ பொறுப்பாளரினால் நிலுவை பணத்தை செலுத்துதல் தொடர்பாக இது வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையை சரிசெய்து சரியான நிலுவை அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) சொத்துக்கள் பதிவேட்டின் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 08 காணிகளின் பெறுமதி உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பட்டோலைகளில் குறிப்பிடப்படாத ஹோமாகம பிரதான அலுவலகத்திற்குரிய காணியின் பெறுமதி மூல உரித்துறுதியை கண்டறிந்ததன் பின்னர் 2023 இன் பட்டோலையில் உள்ளடக்கி சரிசெய்யப்படும். | காணிகளை பெறுமதியிட்டு சொத்து கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலக் கூறுகள் மற்றும் கட்டிட திட்டத்தை அங்கீகரித்தல்<br>-------------------------------------------------<br>மீளாய்வாண்டின் போது சபைக்கு கிடைக்கப் பெற்ற கட்டிடங்கள் மற்றும் காணி உப கூறுகள் விண்ணப்பங்கள் 603 இற்காக சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | குறைபாடான விண்ணப்பங்களாக இருந்தமையால் இது ஏற்பட்டுள்ளது. விண்ணப்பங்களில் குறைபாடுகளை விரைவாக சரிசெய்து வழங்குமாறு | குறைபாடுகளை சரிசெய்து விண்ணப்பங்களுக் காக விரைவாக அங்கீகாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | மீண்டும் விண்ணப்பதாரருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமை | | |
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 02 பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 5,500,000 வருடாந்த பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்பாடுகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | i. பசுக் கன்றுகள் குறித்துரைத்த பிரகாரம் வழங்குவதற்கு உரிய நிறுவனம் தவறியமையின் காரணமாக நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாட்டை ஒதுக்கும் போது அவற்றை அமுல்படுத்துதலின் இயலுமையை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| | ii. கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் செற்படுதல் வேண்டும். |

**4.2 சுற்றாடல் பிரச்சினைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| **கழிவுப் பொருள் முகாமைத்துவம்** | | |
| சபை அதிகார பிரதேசத்தில் 91 கிராம சேவகர் பிரிவுகளில் 50 கிராம சேவகர் பிரிவுகள் அளவில் கழிவுப் பொருள் சேகரிக்கப்படுகின்றது. நாளொன்றுக்கு 35 டொன் அளவில் கழிவுப் பொருள் சேகரிக்கப்படுவதுடன், அந்த கழிவுகள் ஹோமாகம நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள தூவ வத்த கழிவுப் பொருள் தளத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றது. நகர மத்தியில் உள்ள கழிவுப் பொருள் தளத்திற்காக கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பதன் மூலம் நகரின் அசிங்கம், துர்நாற்றம் மற்றும் அசுத்தமடைதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஜேர்மன் ஒத்துழைப்பு நிறுவனத்துடன், தற்போது சேகரிக்கப்படுகின்ற முழுமையாக உக்காத கழிவுப் பொருட்களை ஆக்கபூர்வமானதாக முகாமைத்துவம் செய்வதற்கான செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | கழிவுப் பொருட்களை சேகரிக்கின்ற இடம் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |